மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, 302 கிராமங்கள் பயன்படும் என்று சொன்னேன். குறிப்பாக மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, திருமங்கலம், நிலக்கோட்டை, மேலூர் வட்டங்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர், சிவகங்கை, கிழக்கு இராமநாதபுரம் வட்டங்கள் ஆகிய வற்றைச் சேர்ந்த கிராமங்கள் இதிலே இடம்பெறுகின்றன. பெரிய பட்டியலாக இருப்பதால் எந்த எந்த கிராமங்கள் என்று பிரித்து சொல்ல முடியவில்லை.

மதுராந்தகம் ஏரி

*வினா எண் 235—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் பெரிய ஏரியில் ஆக்கிரமிப்புகள் உள்ளதா?

(ஆ) மதுராந்தகம் பெரிய ஏரியிலிருந்து தனியார்களால் பம்புசெட்டுகள், Oil Engine மூலம் நீர் எடுக்கப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில் அவைகளை அப்புறப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) : ஆம்.

(இ) ஆக்கிரமிப்புக்காரர்களை அகற்றுவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளின் உதவியுடன், அவர்களுக்கு நோட்டீசுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 10.10)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி சட்ட விரோதமாக ஆக்கிரமிப்புச் செய்தவர்கள் மிகவும் வசதி படைத்தவர்கள். அவர்கள் ஆக்கிரமிப்பு செய்த இடத்தில் ஆயில் என்ஜினைக் கொண்டு விவசாயம் செய்து கொண்டு வருவதோடு, இறைக்கும் தண்ணீரைக் கூட மற்றவர்களுக்கு கட்டணம் வசூலித்துக் கொண்டு கொடுத்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இந்தச் சட்ட விரோதமான காரியத்தை தடுக்கும் வகையில் அந்த ஆயில் என்ஜினைக் கைப்பற்ற அரசு முன்வருமா? மேலும் அந்த இடங்களில் மரங்களை நட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளில ஆக்கிரமிப்பு செய்பவர்களை அகற்றி அந்த இடங்களுக்கு அருகாமையில், சமூக காடுகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மரங்களை நடுகிற பணிகளில் வனத்

1983 பிப்ரவரி 11]

துறையோடு சேர்ந்து, இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது. அந்தப் பணியை இந்தப் பகுதிக்கும் விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் சில தனியார்கள் 5 குதிரை சக்தி உள்ள ஆயில் என்ஜினை வைத்துக் கொண்டு பாசனம் செய்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. அதை அப்புறப் படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பால் ஏரியின் கொள் ளளவு குறைந்துள்ளது. அதனால் ஏரியைத் தூர்வார அரசாங் கத்தில் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது,

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான இடங்களில் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து பல்வேறு காரணங்களுக்கு அதனைப் பயன்படுத்துகிறார்கள். அதுவும் வசதி படைத்த சிலரும் இதில் ஈடுபடுகிறார்கள். ஆனால் அவர்களை அப்புறப் படுத்துகையில் வேறு பல இடங்களில் அரசு நோட்டீஸ் கொடுக் காமலேயே அப்புறப்படுத்துகின்ற நடவடிக்கை எடுக்கின்ற நிலை இருக்கையில், இந்த வசதி படைத்தவர்களுக்கு மட்டும் ஏன் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்? அப்படி நோட்டீஸ் கொடுப்பதினால் அவர்கள் கோர்ட்டுக்கு செல்லக் கூடிய நிலை ஏற்படுகின்றதே, அதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில இடங்களில் இப்படி ஆக்கிரமிப்பு செய்தவர்கள் நிரந்தரமாக பயிர் செய்கிற சூழ்நிலையில் இருக் கிறது. ஆகவே நோட்டீஸ் கொடுத்து விட்டு, அவர்களை அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. வேறு சில இடங் களில் ஏரிகளின் கொள் அளவு நிரம்புகிற காலத்தில், ஆக்கிரப் பாளர்கள் அவர்களாகவே வெளியேறுகிறார்கள், திரும்பவும் அவர்கள் வருவதற்குள்ளாக வனத்துறையின் உதவியோடு அங்கே மரங்களை நடுகிற பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். அப்படி உடனே வந்து விட்டால் அவர்களை, நோட்டீஸ் கொடுக்காமலேயே அப்புறப்படுத்துகிறோம். சில இடங்களில் அவர்கள் நிரந்திரமான ஏற்பாடுகளை செய்யக்கூடிய நிலை ஏற் பட்டிருந்தால், அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கிறோம்.